[2009 ஜூலை 21

(அச) கடலூர் மாவட்டம், கந்து வட்டிக் கும்பல்மீது நடவடிக்கை எடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.*

முற்பகல் 10–15

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கடலூர் மாவட்டத்தில் பல ஆண்டுகளாகவே ஒரு கந்து வட்டிக் கும்பல், ஏழையெளிய, கூலி வேலை செய்யும் மக்களிடத்தில் அன்றாடம் பணம் வசூல் செய்வது, அவர்களுடைய வீடு, நிலங்களை அபகரித்து மிரட்டி எழுதி வாங்குவது, வேலைக்கு உணவு வழங்கும் திட்டத்தில் 80 ரூபாய் வாங்கி வருகின்ற அந்த உழைப்பாளிகளிடத்தில் சென்று அன்றாடம் அதை வசூல் செய்வது என்கிற ஒரு நிலை தொடர்ந்து இருந்து வருகிறது. இதுகுறித்து கடந்த சில நாட்களுக்கு முன்பாக கடலூர் காவல் நிலையத்தில் பத்துக்கும் மேற்பட்ட புகார்கள் கொடுத்தும், இன்னும் அவை விசாரணை நிலையிலேயே இருந்துகொண்டிருக்கின்றன. இதுபோன்ற கும்பல்களைப் பற்றி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் நிச்சயமாக உரிய நடவடிக்கை எடுத்து அவர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்ற அடிப்படையில், அந்த கந்து வட்டிக் கும்பலை உடனடியாகக் கைது செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிடுவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கந்து வட்டி மாத்திரமல்ல; கந்து வட்டி, கட்டப் பஞ்சாயத்து இந்த இரண்டையும் சேர்த்து ஒழிப்பதற்கு அரசு தீவிரமான முயற்சிகளை மேற்கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி)*

(அஉ) நீலகிரி மாவட்டம், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உதவி செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.*